SRI LANKA

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் 03

# 3801 – நிதி அறிக்கையிடல் (FAR)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## 3801 – நிதி அறிக்கையிடல் (FAR)
## முன்னோடி வினாத்தாள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C**.
- பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C** ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 20 |
| பகுதி B | 30 |
| பகுதி C | 50 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

**விடைகள்:**

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

**விடைத்தாள் புத்தகம்:**

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும்.
- மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01***

நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச் சட்டகமானது கணக்கீட்டு நியமங்களின் அபிவிருத்தி மற்றும் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு ஆகியவற்றுக்கான அடிப்படையை வழங்குகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பொது நோக்க நிதி அறிக்கையிடலின் நோக்கத்தைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி நிதித் தகவல்களின் மூன்று (03) மேம்படுத்தல் தரம்சார் பண்புகளை (enhancing qualitative characteristics) **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

***வினா 02***

நிலைபேற்றுத்தன்மை தொடர்பான நிதிசார் வெளிப்படுத்துகைகள் நிதிக் கூற்றுக்களின் முதன்மைப் பயனர்களுக்கு அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். SLFRS S1 மற்றும் S2 என்பன மாறாததும் ஒப்பிடத்தக்கதுமான நிலைபேறான வெளிப்படுத்துகைகளுக்கான ஒரு வேலைச் சட்டகத்தை வழங்குகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) SLFRS S1 – நிலைபேற்றுத்தன்மை தொடர்பான நிதித் தகவல்களின் வெளிப்படுத்துகைக்கான பொதுத் தேவைப்பாடுகள் என்ற நியமத்தின் பிரதான நோக்கத்தைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) SLFRS S1 இன் கீழ் தேவைப்படும் மூன்று (03) பிரதான வெளிப்படுத்துகைப் பகுதிகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## *வினா 03*

நவீன வணிக நிறுவனங்களில் டிஜிடல் கணக்கீட்டு முறைமைகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. நிதித் தகவல்களின் ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கு தரவுப் பாதுகாப்பையும் துல்லியத்தன்மையையும் உறுதி செய்வது முக்கியமானதாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) டிஜிடல் கணக்கீட்டு முறைமைகளில் உள்ள இரண்டு (02) பொதுவான வழுக்களை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) கணக்கீட்டு வழுக்களைத் தடுப்பதற்கு அல்லது சரிசெய்வதற்கு செயற்கை நுண்ணறிவு (AI) உதவும் மூன்று (03) வழிகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## *வினா 04*

நிதி அறிக்கையிடல் மற்றும் நிலைபேற்றுத்தன்மை வெளிப்படுத்துகைகளில் மாறாத தன்மையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்வதற்கு கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிலைபேற்றுத்தன்மை நியமங்கள் ஆகியவற்றை இலங்கை பின்பற்றுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கணக்கீட்டு மற்றும் நிலைபேற்றுத்தன்மை நியமங்களைப் பின்பற்றுகையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (CA ஸ்ரீலங்கா) வகிபாகத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) மேற்கூறிய வகிபாகத்தை நிறைவேற்றுகையில் CA ஸ்ரீலங்காவுக்கு உதவுவதற்கு அமைக்கப்பட்டுள்ள இரண்டு (02) குழுக்களை (committees) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## *பகுதி A முடிவு*

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 30 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 05***

(a) 2024 ஏப்ரல் 01 இல், **Sun Ltd.** ஆனது இயந்திரமொன்றை ரூ. 10,000,000/- இற்குக் கொள்வனவு செய்தது. கணக்கீட்டு நோக்கங்களுக்காக, இயந்திரமானது 5 ஆண்டுகள் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்படுகிறது. எவ்வாறாயினும், வரி நோக்கங்களுக்காக இயந்திரமானது 4 ஆண்டுகள் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்படுகிறது. பொருத்தமான வருமான வரி வீதம் 30% ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

இயந்திரம் தொடர்பாக 2025 மார்ச் 31 இலான பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பினைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல், **Sun Ltd.** ஆனது LKAS 19 இன்படி தனது பணிக்கொடைக் கடப்பாடாக ரூ. 2,500,000/- இனை மதிப்பீடு செய்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

LKAS 19 – ஊழியர் நன்மைகள் என்ற நியமத்தின்படி, பணிக்கொடை ஏற்பாடு தொடர்பாக வழங்கப்பட வேண்டிய இரண்டு (02) வெளிப்படுத்துகைகளை (disclosures) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(c) **Sun Ltd.** ஆனது இயந்திரம் ஒன்றை விற்பனை செய்து, ஆறு மாதங்களுக்கு பராமரிப்பு சேவைகளை இலவசமாக வழங்குவதற்கு 2025 பெப்ரவரி 01 இல் வாடிக்கையாளர் ஒருவருடன் ஒப்பந்தம் செய்தது. மொத்த ஒப்பந்த விலை ரூ. 5,000,000/-. இயந்திரம் உடனடியாகவே விநியோகம் செய்யப்பட்டது.

பாகங்களின் தனித்தனியான விற்பனை விலைகள் பின்வருமாறு :

- இயந்திரம்: ரூ. 4,800,000/-
- பராமரிப்பு: ரூ. 200,000/-

**நீங்கள் செய்ய வேண்டியது ;**

SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம் என்ற நியமத்தின் கீழான 5 படிநிலை மாதிரியின்படி, 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வருமானமானது எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் என **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 06*

2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 இலான **Mars (Pvt) Ltd.** இன் நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**Mars (Pvt) Ltd.**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூ.'000)*

| மார்ச் 31 இல் | 2025 | 2024 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 18,800 | 17,900 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| இருப்புகள் | 6,200 | 5,800 |
| வியாபார மற்றும் பிற வருமதிகள் | 6,000 | 5,400 |
| காசும் காசுச் சமானங்களும் | 1,800 | 2,400 |
| | **14,000** | **13,600** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **32,800** | **31,500** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 25,000 | 25,000 |
| கைக்கொள் இலாபம் | 3,600 | 2,400 |
| | **28,600** | **27,400** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 2,000 | 1,000 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு) | 420 | 360 |
| | **2,420** | **1,360** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 1,780 | 1,740 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | - | 1,000 |
| | **1,780** | **2,740** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **32,800** | **31,500** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரூ. 2,000,000/-.

(2) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினம் ரூ. 800,000/-.

(3) 2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 இலான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் திரண்ட தேய்மானங்கள் முறையே ரூ. 3,200,000/- உம் ரூ. 2,600,000/- உம் ஆகும்.

(4) ஆண்டிற்கான கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூ. 150,000/- ஆகும். இது அந்த ஆண்டிலேயே செலுத்தப்பட்டது. ஆண்டின் காலப்பகுதியில் வேறு எந்த கடன் மீள்கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப் படவில்லை.

(5) முற்றாக தேய்மானஞ் செய்யப்பட்ட ரூ. 600,000/- கிரயமான வாகனம் 2024 ஏப்ரல் 01 இல் ரூ. 150,000/- இற்கு விற்கப்பட்டது.

(6) 2024 மே 01 இல் ஒரு புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அது அத்திகதியிலேயே மூலதனமாக்கப்பட்டது.

(7) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூ. 800,000/- இடைக்காலப் பங்கிலாபத்தைச் செலுத்தியது.

(8) ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூ. 120,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

<u>நேரில் முறையைப் பயன்படுத்தி,</u> 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Mars (Pvt) Ltd.** இன் காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## *வினா 07*

(a) **Moon Ltd.** ஆனது 3 வருட காலத்திற்காக 2024 ஏப்ரல் 01 இல் ஒரு குத்தகை உடன்படிக்கையைச் செய்து கொண்டது. வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணம் ரூ. 1,200,000/- ஆக உள்ளதுடன் அது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆந் திகதி செலுத்தப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக, **Moon Ltd.** முற்பண குத்தகைக் கொடுப்பனவு ரூ. 800,000/- ஐச் செலுத்தியுள்ளது. உள்ளார்ந்த வீதம் ஆண்டிற்கு 10% ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி குத்தகை தொடர்பில் 2025 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்காக தொகைகள் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 15 இல், **Moon Ltd.** இற்கு ரூ. 5 மில்லியனுக்கான சட்டபூர்வ உரிமைகோரல் (legal claim) குறித்து தெரிவிக்கப்பட்டது. இழப்பீடு தேவைப்படுவது சாத்தியமானது ஆயினும் நிகழத்தக்கதல்ல என சட்ட ஆலோசனை பரிந்துரைக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(i) LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பரிப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, சட்டபூர்வ உரிமைகோரலானது 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென்பதை **விபரிக்குக.**

(02 புள்ளிகள்)

(ii) சட்டபூர்வ உரிமைகோரல் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட வேண்டிய இரண்டு (02) வெளிப்படுத்துகைகளைக் (disclosures) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *பகுதி B முடிவு*

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி C**

***வினா 08***

பின்வரும் பரீட்சை மீதியானது 2025 மார்ச் 31 இலான **Metro Wheels PLC** (சக்கரங்களைத் தயாரித்து விநியோகிக்கும் வணிகத்தில் ஈடுபடும் ஒரு கம்பனி) இன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது:

**Metro Wheels PLC**

**2025 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (40,000,000 சாதாரண பங்குகள்) | | 400,000 |
| 2024 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 18,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணியும் கட்டடமும் - கிரயத்தில் (காணிக் கிரயம் – ரூ. 120 மில்லியன்) | 180,000 | |
| இயந்திரம் | 65,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 15,000 | |
| உபகரணம் | 7,000 | |
| **2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :** | | |
| கட்டடம் | | 18,000 |
| இயந்திரம் | | 21,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 4,000 |
| உபகரணம் | | 600 |
| மூலதன புத்துருவாகும் வேலை – கட்டடம் | 85,000 | |
| 2025 மார்ச் 31 இல் இருப்பு – கிரயத்தில் | 110,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 105,000 | 28,000 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 114,800 | |
| 2024 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகை | | 18,000 |
| நீண்ட காலக் கடன் | | 60,000 |
| செலுத்திய வருமான வரி | 11,000 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 680,000 | 940,000 |
| 2024 ஏப்ரல் 01 இல் செலுத்த வேண்டிய வருமான வரி | | 10,000 |
| ஏனைய வருமானம் | | 4,000 |
| முற்கொடுப்பனவுகள் | 4,800 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபங்கள் | 20,000 | |
| நிருவாகச் செலவினங்கள் | 75,000 | |
| விநியோகச் செலவினங்கள் | 40,000 | |
| ஏனைய செலவினங்கள் | 9,000 | |
| | **1,521,600** | **1,521,600** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 யூலை 01 இல் ரூ. 8,000,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் 2025 மார்ச் 31 இல் ரூ. 6,500,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. காசுக் கணக்கு மற்றும் விற்பனைக் கணக்கு ஆகியவற்றில் பெறப்பட்ட காசு பதிவு செய்யப்பட்டதைத் தவிர வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலங்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 50 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 10 ஆண்டுகள் |
| உபகரணம் | : | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 04 ஆண்டுகள் |

(3) கம்பனி 2025 மார்ச் 31 இல் இயந்திரத்திற்கான சேத இழப்புச் சோதனையை நடத்தியது. அதில் திரும்பப்பெறத்தக்க தொகையாக ரூ. 35,000,000/- இருப்பது தெரிய வந்தது. சேத இழப்பு தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

(4) 2024 யூலை 01 இல், கம்பனியானது கட்டடம் ஒன்றை நிருமாணிப்பதற்காக ஆண்டிற்கு 12% வட்டியில் ரூ. 60 மில்லியன் கடனனொன்றைப் பெற்றுள்ளது. நிருமாணம் அதே திகதியிலேயே தொடங்கப்பட்டது. கடன் கொடுப்பனவுகள் 2026 யூலை 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பமாகும். ஆண்டிற்கான வட்டிக்காக கணக்குகளில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) கடந்த நிதியாண்டில் பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிடமுடியாக் கடன் ரூ. 1,800,000/- ஆனது ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியால் மீட்கப்பட்டது. இந்தத் தொகை வியாபார வருமதிகள் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது. மேலும், 2025 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியில் 5% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணத் தீர்மானிக்கப்பட்டது.

(6) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனைக் கட்டணங்கள் முறையே ரூ.1,000,000/- உம் ரூ. 600,000/- உம் ஆகும். இவை 2025 ஏப்ரலில் செலுத்தப்பட்டன. எவ்வாறாயினும், இவை 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கணக்கிற் கொள்ளப்படவில்லை. முற்கொடுப்பனவுக் கணக்கானது 2025 நாட்காட்டி ஆண்டு முழுமைக்குமாகச் செய்யப்பட்ட வாடகைக் கொடுப்பனவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(7) 2024/25 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமான வரிப் பரிப்பு ரூ. 8,000,000/- ஆகும். இது தொடர்பில் எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. 2023/24 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமான வரிக் கொடுப்பனவுகள் ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்டன.

(8) 2025 மார்ச் 31 இல், காணியின் அடுத்துவரும் அளவீட்டுக் கொள்கையை மீள்மதிப்பீட்டு மாதிரிக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, காணி மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் இது மீள்மதிப்பீட்டு நயம் ரூ. 20 மில்லியனாக இருந்ததைத் தெரிவித்தது. எனினும் இது தொடர்பில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(9) 2025 மே 20 இல் இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பங்கொன்றுக்கு ரூ. 75 சதம் இறுதிப் பங்கிலாபத்திற்கு கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியதுடன் நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2025 யூன் 30 இல் அதிகாரமளித்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவத்தில் **Metro Wheels PLC** இற்காகப் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (பிற முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(c) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (03 புள்ளிகள்)

(d) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## *வினா 09*

கீழ்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 மற்றும் 2024 மார்ச் 31 ஆகிய திகதிகளில் / முடிவடைந்த ஆண்டிற்கான **Vega PLC** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

*(ரூ. '000)*

| **முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2025 மார்ச் 31** | **2024 மார்ச் 31** |
|---|---|---|
| விற்பனைகள் | 1,850,000 | 1,620,000 |
| விற்பனைக் கிரயம் | (1,420,000) | (1,260,000) |
| **மொத்த இலாபம்** | **430,000** | **360,000** |
| வட்டிச் செலவினம் | (22,000) | (20,000) |
| வருமான வரி | (18,000) | (16,500) |
| வரிக்குப் பின்னரான நிகர இலாபம் | 150,000 | 123,500 |
| **மார்ச் 31 இல்** | **2025** | **2024** |
| நடைமுறைச் சொத்துக்கள் | 980,000 | 1,120,000 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 140,000 | 130,000 |
| வியாபார வருமதிகள் | 580,000 | 460,000 |
| இருப்புகள் | 120,000 | 115,000 |
| வியாபார சென்மதிகள் | 130,000 | 120,000 |
| வட்டி தாங்கும் கடன்கள் | 60,000 | 65,000 |
| பங்குதாரர்களின் உரிமையாண்மை | 180,000 | 200,000 |
| விநியோகித்த பங்குகளின் எண்ணிக்கை ('000) | 20,000 | 20,000 |

மொத்த விற்பனையில் 70% ஆனவை கடன் விற்பனைகளாகவும் 85% ஆன கொள்வனவுகள் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவைகளாகவும் உள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2025 மார்ச் 31 இலான / முடிவடைந்த ஆண்டிற்கான மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நிகர இலாப விகிதம்

(iii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(iv) கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம்

(v) பங்கொன்றின் வருவாய்

(05 புள்ளிகள்)

(b) **Vega PLC** செயற்படுகின்ற துறைக்கான தொழிற்றுறைச் சராசரி விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| மொத்த இலாப விகிதம் | 25% |
| நிகர இலாப விகிதம் | 10% |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 90 நாட்கள் |
| கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் | 60 நாட்கள் |
| பங்கொன்றின் வருவாய் | ரூ. 8/- |

தொழிற்றுறைச் சராசரிகளுடன் **Vega PLC** இன் விகிதங்களை ஒப்பிட்டு, ஏதாவது குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் காணப்படின் அவற்றுக்கான சாத்தியமான காரணங்களையும் விபரித்து, பொழிப்பு அறிக்கை ஒன்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 10*

2024 ஏப்ரல் 01 இல், **Orion PLC (OP)** ஆனது **Nova PLC (NP)** இன் சாதாரண பங்கு மூலதனத்தின் 75% இனை ரூ. 90 மில்லியனுக்கு கையகப்படுத்தியது. **OP** மற்றும் **NP** ஆகியவற்றின் 2025 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூ. '000)*

| **2025 மார்ச் 31 இல்** | **OP** | **NP** |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கொண்டுசெல்லல் பெறுமதியில் | 120,000 | 80,000 |
| **NP** இல் முதலீடு | 90,000 | – |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| இருப்புகள் | 18,000 | 22,000 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 20,000 | 14,000 |
| **NP** செலுத்த வேண்டிய தொகை | 3,000 | – |
| காசும் காசுச் சமானங்களும் | 5,000 | 2,500 |
| | 46,000 | 38,500 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **256,000** | **118,500** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 150,000 | 60,000 |
| கைக்கொள் இலாபம் | 30,000 | 10,000 |
| | 180,000 | 70,000 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 40,000 | 30,000 |
| செலுத்த வேண்டிய ஊழியர் நன்மைகள் | 6,000 | 3,500 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 27,000 | 12,000 |
| **OP** இற்குச் செலுத்த வேண்டிய தொகை | – | 3,000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 3,000 | – |
| | 30,000 | 15,000 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **256,000** | **118,500** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) கையகப்படுத்தல் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் (NCI) சீர் மதிப்பு ரூ. 25 மில்லியன் ஆகும். **NP** இன் இனங்காணத்தக்க நிகரச் சொத்துக்களின் சீர் மதிப்பு அதன் புத்தகப் பெறுமதிக்குச் சமனாகும். கையகப்படுத்தல் திகதியில், **NP** இன் கைக்கொள் இலாபம் ரூ. 4 மில்லியன் ஆகும்.

(2) 2024 யூலை 01 இல், **NP** ஆனது ரூ. 5 மில்லியன் பெறுமதியான பொருள்களை **OP** இற்கு விற்பனை செய்துள்ளது. **NP** ஆனது கிரயத்தில் 25% இலாபத்தைப் பிரயோகிக்கிறது. **NP** இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இருப்புகளில் ரூ. 1 மில்லியன் பெறுமதியான இருப்புகள் விற்பனை செய்யப்படாது 2025 மார்ச் 31 இல் **OP** இன் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன.

(3) 2025 மார்ச் 31 இல் சேத இழப்புச் சோதனை நடத்தப்பட்டதுடன், அதில் கம்பனியின் கையகப்படுத்தல் மீதான நன்மதிப்பு ரூ. 4 மில்லியனால் சேத இழப்பு அடைந்திருப்பது வெளிப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Nova PLC** இன் கையகப்படுத்தல் மீது எழுகின்ற நன்மதிப்பைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் **Orion PLC** குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதி நிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.**

(11 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

***பகுதி C முடிவு***

# செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிவு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதி மிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

**இலங்கை**

**கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

**பாடத்திட்டம் 2025**

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் 03

# 3801 – நிதி அறிக்கையிடல் (FAR)

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு**

# விடைகள்

**நான்கு [04] கட்டாய வினாக்கள்**

[மொத்தம் 20 புள்ளிகள்]

**பகுதி - A**

***வினா 01 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 01 – ஆளுகைக் கட்டமைப்பு, கணக்கீட்டில் நெறிமுறைகளின் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த அறிக்கையிடலும் நிலைபேறான அறிக்கையிடலும், மற்றும் நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு வேலைச்சட்டகம்**

**கற்றற் பேறுகள் –** நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு வேலைச்சட்டகத்தை ஆராய்தல்.

**(a)** பொது நோக்க நிதி அறிக்கையிடலின் நோக்கமானது அறிக்கையிடும் நிறுவனம் பற்றிய நிதித் தகவல்களை வழங்குவதாகும். இது ஏற்கனவே உள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்கள், கடன் வழங்குநர்கள் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோருக்கு நிறுவனத்திற்கு வளங்களை வழங்குவது பற்றித் தீர்மானமெடுப்பதில் பயனுள்ளதாக இருக்கும். **(02 புள்ளிகள்)**

**(b)**

(1) ஒப்பிடும் தன்மை

(2) சரிபார்க்கும் தன்மை

(3) சரியான நேரத்தில் செயற்படுத்தல்

(4) புரிந்துகொள்ளும் தன்மை **(01 புள்ளி வீதம், அதிகபட்சம் 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

***வினா 02 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 01 – ஆளுகைக் கட்டமைப்பு, கணக்கீட்டில் நெறிமுறைகளின் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த அறிக்கையிடலும் நிலைபேறான அறிக்கையிடலும், மற்றும் நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு வேலைச்சட்டகம்**

**கற்றற் பேறுகள் –** ஒருங்கிணைந்த அறிக்கையிடலையும் நிலைபேறான அறிக்கையிடலையும் விபரித்தல்

(a) SLFRS S1 இன் பிரதான நோக்கமானது ஒரு நிறுவனம் அதன் நிலைபேற்றுத்தன்மை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதாகும். இது நிறுவனத்திற்கு வளங்களை வழங்குவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் பொது நோக்க நிதி அறிக்கைகளின் முதன்மைப் பயனர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

**(02 புள்ளிகள்)**

(b) (1) ஆளுகை

(2) தந்திரோபாயம்

(3) இடர் முகாமைத்துவம்

(4) அளவீடுகளும் இலக்குகளும். **(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

***வினா 03 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 06 – கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடல் செயன்முறையின் டிஜிடல்மயமாக்கல்**

கற்றற் **பேறுகள் –** டிஜிடல் கணக்கீட்டுக் கருவிகளை அதன் நன்மைகளுடன் இனங் காண்பர.

- டிஜிடல் கணக்கீட்டில் தரவுப் பாதுகாப்பையும் துல்லியத்தன்மையையும் விபரிப்பர்.

**(a)**

(1) இரட்டிப்புப் பதிவுகள்

(2) தவறான கணக்கு வகைப்படுத்தல்

(3) தரவுப் பதிவு வழுக்கள்

(4) எதிர்ப்பக்கப் பதிவு வழு

(5) கணக்கிணக்க வழுக்கள்

(6) தரகு வழுக்கள்

(7) விடுபாட்டு வழுக்கள். **(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(b)**

(1) ஒழுங்கின்மையை கண்டறிதல் / AI ஆனது மீளாய்வுக்காக அசாதாரண பரிவர்த்தனைகளை கொடியிடலாம்.

(2) தன்னியக்கமான கணக்கிணக்கம் /AI ஆனது பொருந்தாதவற்றை இனங்காண்பதற்கு முறைமைகளுக்கு இடையே பதிவுகளைப் பொருத்தலாம்.

(3) திறன்மிக்க வகைப்படுத்தல் / AI ஆனது வரலாற்று ரீதியான தரவுகளின் அடிப்படையில் சரியான கணக்கு வகைப்படுத்தல்களை கற்று, பிரயோகிக்கலாம்.

**(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

***வினா 04 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 02 – நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஒழுங்குமுறைத் தேவைகள், பிரயோக மற்றும் வெளிப்படுத்துகைத் தேவைகள்**

கற்றற் பேறுகள் – உலகளாவிய கணக்கீட்டு நியம அபிவிருத்திச் செயன்முறை, இலங்கை கணக்கீட்டு நியமங்களை ஏற்றுக்கொள்வது, மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், கணக்கீட்டு நியமங்கள் ஆணைக்குழு, நிலைபேற்றுத்தன்மை வெளிப்படுத்துகை நியமங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் வகிபாகம் போன்றவற்றை விபரித்தல்

**(a)** CA ஸ்ரீ லங்கா என்பது இலங்கையில் உள்ள அதிகாரபூர்வ கணக்கீட்டு நியமங்களை அமைக்கும் நிறுவனமாகும். இது உலகளாவிய நடைமுறைகளுடன் இணக்கத்தையும் மாறாத தன்மையையும் உறுதி செய்து, IFRS, SLFRS போன்ற சர்வதேச நியமங்களை பின்பற்றி நடைமுறைப்படுத்துகிறது.

**(03 புள்ளிகள்)**

**(b)**

(1) கணக்கீட்டு நியமங்கள் குழு

(2) நிலைபேற்றுத்தன்மை வெளிப்படுத்துகை நியமங்கள் குழு **(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

***பகுதி A முடிவு***

**மூன்று [03] கட்டாய வினாக்கள்**

[மொத்தம் 30 புள்ளிகள்]

## பகுதி - B

***வினா 05 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 02 – நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஒழுங்குமுறைத் தேவைகள், பிரயோக மற்றும் வெளிப்படுத்துகைத் தேவைகள்**

கற்றற் பேறுகள் – இலங்கை கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுச் செய்கைகளையும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளையும் பிரயோகித்தல்

**(a)** *(ரூ.)*

| கணக்கீட்டு அடிப்படை | வரி அடிப்படை | தற்காலிக வித்தியாசங்கள் | பிற்போடப்பட்ட வரிப் பரிப்பு |
|---|---|---|---|
| (10,000,000 – 10,000,000/5) = 8,000,000 | (10,000,000 – 10,000,000/4) = 7,500,000 | (8,000 – 7,500) = 500,000 | (500,000 x 30%) = 150,000 |

**(03 புள்ளிகள்)**

**(b)** LKAS 19 இன்படி, பணிக்கொடைக்காக (வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்) பின்வரும் வெளிப்படுத்துகைகள் அவசியமானதாகும் :

(1) வரையறுத்த நன்மைக் கடப்பாடுகளின் இற்றைப் பெறுமதியின் இணக்கம் (ஆரம்ப மீதி, நடப்பு சேவைக் கிரயம், வட்டிக் கிரயம், செலுத்திய நன்மைகள், உண்மையான நயம் / நட்டங்கள், இறுதி மீதி ஆகியவற்றைக் காட்டுதல்).

(2) நிதிக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள் (இலாபம் அல்லது நட்டத்தில் உள்ள பரிப்பு மற்றும் ஏதாவது செலவினம் உள்ளடங்கலாக).

(3) பயன்படுத்தப்பட்ட உண்மையான எடுகோள்கள் (கழிவீட்டுக் வீதம், சம்பள வளர்ச்சி வீதம், இளைப்பாறும் வயது போன்றவை)

(4) எடுகோள்களில் ஏற்படும் மாற்றங்கள் எவ்வாறு கடப்பாட்டைப் பாதிக்கிறது என்பதைக் காட்டும் உணர்திறன் பகுப்பாய்வு

**(01 புள்ளி வீதம், அதிகபட்சம் 02 புள்ளிகள்)**

**(c)** (1) 2025 பெப்ரவரி 01 இல் வலிதான ஒப்பந்தம் காணப்பட்டது.

(2) ஒப்பந்தமானது இரண்டு செயற்பாட்டுக் கடப்பாடுகளை உள்ளடக்குகிறது: **(01 புள்ளி)**

– இயந்திரத்தின் ஒப்படைப்பு

– பராமரிப்புச் சேவைகள்

(3) வருமானமானது ஒவ்வொரு பகுதியினதும் தனித்தனியான விற்பனை விலைகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். (அதாவது, இயந்திரத்திற்கானது ரூ. 4,800,000/- மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கானது ரூ. 200,000/-) **(01 புள்ளி)**

(4) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் கீழ்வருமாறு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் :

– இயந்திர வருமானம் : ரூ. 4,800,000/- (குறிப்பிட்ட ஒரு தருணத்தில்) **(01 புள்ளி)**

– பராமரிப்பு உதவி வருமானம் (2 மாதங்கள்): ரூ. 66,667/- (காலப்பகுதி ஈறாக) (200,000/6 x 2) **(01 புள்ளி)**

(5) ஆண்டிற்கான மொத்த வருமானம் : ரூ. 4,866,667/-. **(01 புள்ளி)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 06 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 03 –** பிரசுரிப்பு நோக்கங்களுக்காக பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நிதிக் கூற்றுக்கள்

கற்றற் பேறுகள் – LKAS 7 இன்படி தனி உரிமம் ஒன்றிற்கான காசுப் பாய்வுக் கூற்றைத் தயாரித்தல்

**Mars (Pvt) Ltd.**

**காசுப் பாய்வுக் கூற்று**

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** ***(ரு. '000)***

| | |
|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வுகள் :** | |
| வரிக்கு முன்னரான நிகர இலாபம் **(W-1)** | 2,800 |
| சீராக்கங்கள் : | |
| தேய்மானம் **(W-2)** | 600 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 120 |
| வட்டிச் செலவினம் | 150 |
| PPE இன் விற்பனை மீதான இலாபம் | (150) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள் :** | |
| இருப்புகளில் அதிகரிப்பு | (400) |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் அதிகரிப்பு | (600) |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளில் அதிகரிப்பு | 40 |
| **செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட காசு** | **2,560** |
| செலுத்திய பணிக்கொடை **(W-3)** | (60) |
| செலுத்திய வருமான வரி **(W-4)** | (1,800) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் பாய்வு** | **700** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வுகள்:** | |
| வாகன விற்பனை மூலமான வருமானம் | 150 |
| புதிய இயந்திரத்தின் கொள்வனவு | (1,500) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர காசு** | **(1,350)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வுகள் :** | |
| ஆண்டின் காலப்பகுதியில் பெறப்பட்ட நீண்ட கால கடன்கள் | 1,000 |
| செலுத்திய வட்டி | (150) |
| செலுத்திய பங்கிலாபங்கள் | (800) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசு** | **50** |
| **காசும் காசுச் சமானங்களிலுமிருந்தான நிகர குறைவு** | **(600)** |
| **2024.04.01 இல் காசும் காசுச் சமானங்களினதும் மீதி** | **2,400** |
| **2025.03.31 இல் காசும் காசுச் சமானங்களினதும் மீதி** | **1,800** |

**செய்முறைகள்:**

**(W-1) வரிக்கு முன்னரான நிகர இலாபம் / (நட்டம்)**

*(ரூ. '000)*

| | |
|---|---|
| PAT | 2,000 |
| Tax | 800 |
| PBT | 2,800 |

**(W-2) PPE இன் தேய்மானம்** *(ரூ. '000)*

| | |
|---|---|
| இறுதி திரண்ட தேய்மான மீதி | 3,200 |
| ஆரம்ப திரண்ட தேய்மான மீதி | (2,600) |
| ஆண்டிற்கான தேய்மானம் | 600 |

**(W-3) செலுத்திய பணிக்கொடை** *(ரூ. '000)*

| | |
|---|---|
| இறுதி பணிக்கொடை ஏற்பாடு | 420 |
| ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு | (120) |
| ஆரம்ப பணிக்கொடை ஏற்பாடு | (360) |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (60) |

**பணிக்கொடைக்கான ஏற்பாடு**

| | | | |
|---|---|---|---|
| காசு | **60** | B/B/F | 360 |
| B/C/D | 420 | P/L | 120 |
| | **480** | | **480** |

**(W-4) செலுத்த வேண்டிய வருமான வரி**

| | | | |
|---|---|---|---|
| காசு | 1,800 | B/B/F | 1,000 |
| | | P/L | 800 |
| | **1,800** | | **1,800** |

**(10 புள்ளிகள்)**

***வினா 07 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

| | |
|---|---|
| **அலகு 02 –** | **நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஒழுங்குமுறைத் தேவைகள், பிரயோக மற்றும் வெளிப்படுத்துகைத் தேவைகள்** |
| கற்றற் பேறுகள் – | இலங்கை கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுச் செய்கைகளையும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளையும் பிரயோகித்தல் |

**2025 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்றின் பிரித்தெடுப்பு :**

| | **ரூ. '000** |
|---|---:|
| பயன்பாட்டு உரிமைச் சொத்து | 2,522,815 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | |
| குத்தகை கடன்கொடுத்தோர் | 1,090,908 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | |
| குத்தகை கடன்கொடுத்தோர் | 991,736 |

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றின் பிரித்தெடுப்பு :**

| | **ரூ. '000** |
|---|---:|
| குத்தகை வட்டி | 298,422 |
| தேய்மானம் | 1,261,407 |

**செய்முறைகள் :**

குத்தகைப் பரிப்பு என்பது எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளின் இற்றைப் பெறுமதி ஆகும்.

பயன்பாட்டு உரிமைச் சொத்தானது குத்தகைப் பரிப்பையும் முன்கூட்டிய கொடுப்பனவையும் சேர்த்து கூட்டுவதை உள்ளடக்குகிறது.

| | |
|---|---|
| குத்தகைப் பரிப்பு | 2,984,222.39 |
| பயன்பாட்டு உரிமைச் சொத்து | 3,784,222.39 |

$$PV = Px \left(\frac{1-(1+r)^{-n}}{r}\right)$$

$$PV = 1.2 \text{ மில்லியன் } x \left(\frac{1-(1+0.10)^{-3}}{r}\right)$$

$$= 1.2 \text{ மில்லியன் } x\ 2.48685$$

$$= \underline{\mathbf{2,984,222.39}}$$

**அல்லது**

குத்தகைப் பரிப்பு = $\frac{1,200,000}{1.1} + \frac{1,200,000}{1.1^2} + \frac{1,200,000}{1.1^3}$

= 1,090,909.09 + 991,735.54 + 901,577.76

= 2,984,222.09

பயன்பாட்டு உரிமைச் சொத்து = 2,984,222.39 + 800,000

= **3,784,222.39**

**(06 புள்ளிகள்)**

தேய்மானம் = 3,784,222 / 3 = 1,261,407

பயன்பாட்டு உரிமைச் சொத்தின் முன்கொணரற் பெறுமதி = 3,784,222 – 1,261,407

2025 மார்ச் 31 இல் = **2,522,815**

| **ஆண்டு** | **O/B** | **தவணைக் கட்டணம்** | **மூலதனம்** | **வட்டி** | **C/B** |
|---|---|---|---|---|---|
| 1 | 2,984,222 | 1,200,000 | 901,578 | 298,422 | 208,264 |
| 2 | 2,082,644 | 1,200,000 | 991,736 | 208,264 | 1,090,908 |
| 3 | 1,090,908 | 1,200,000 | 1,090,908 | 109,092 | - |

**(a)** **(i)** கடப்பாடு சாத்தியமானது ஆயினும் நிகழத்தக்க வாய்ப்பு இல்லாததால், இது ஏற்பாட்டிற்கான தேர்வு நிபந்தனையைப் பூர்த்திசெய்யத் தேவையில்லை.

இது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் நிகழத்தக்க பொறுப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

**(02 புள்ளிகள்)**

**(ii)**

(1) நிகழத்தக்க பொறுப்பின் தன்மை. நிகழத்தக்க பொறுப்பின் தன்மை பற்றிய சுருக்கமான விளக்கம்.

(2) அதனது நிதி ரீதியான தாக்கத்தின் ஒரு மதிப்பீடு அல்லது அத்தகைய மதிப்பீடு மேற்கொள்ள முடியாது போன்ற ஒரு கூற்று.

(3) ஏதாவது வெளிப்பாய்வின் தொகை அல்லது உரிய நேரம் தொடர்பான நிச்சயமற்ற தன்மையின் ஒரு சுட்டிக்காட்டு.

(4) ஏதாவது மீளளிப்பின் சாத்தியத்தன்மை.

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***பகுதி B முடிவு***

மூன்று [03] கட்டாய வினாக்கள்

[மொத்தம் 50 புள்ளிகள்]

**பகுதி - C**

***வினா 08 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 03 – பிரசுரிப்பு நோக்கங்களுக்காக பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நிதிக் கூற்றுக்கள்**

கற்றற் பேறுகள் – இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி பிரசுரிப்பு நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களைத் (பொது நோக்க நிதிக் கூற்றுக்கள்) தயாரித்து, அறிக்கையிடுதல்

**(a)**

**Metro Wheels PLC**

**இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று**

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** *(ரூ.'000)*

| | | |
|---|---|---|
| விற்பனைகள் **(W-1)** | | 933,500 |
| கழி: விற்பனைக் கிரயம் | | (680,000) |
| **மொத்த இலாபம்** | | **253,500** |
| ஏனைய வருமானம் **(W-5)** | | 22,460 |
| | | 275,960 |
| **கழி: செலவினங்கள்** | | |
| விநியோகச் செலவினங்கள் **(W-5)** | (43,750) | |
| நிருவாகச் செலவினங்கள் **(W-5)** | (86,900) | |
| ஏனைய செலவினங்கள் **(W-5)** | (11,500) | (142,150) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **133,810** |
| வருமான வரி **(W-6)** | | (9,000) |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | | **124,810** |
| **பிற முற்றடக்க வருமானம்** | | **-** |
| மீள்மதிப்பீட்டு நயம் | | 20,000 |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | | **144,810** |

**(10 புள்ளிகள்)**

**(b)** **Metro Wheels PLC**

**நிதி நிலைக் கூற்று**

**2025 மார்ச் 31 இல் 2025** *(ரூ.'000)*

| | | |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | | 315,950 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| இருப்புகள் | 110,000 | |
| வியாபார வருமதிகள் **(W-8)** | 101,460 | |
| முற்கொடுப்பனவுகள் (4,800 – 1,200) | 3,600 | |
| காசும் காசுச் சமானங்களும் | 114,800 | 329,860 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **645,810** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 400,000 | |
| கைக்கொள் இலாபம் | 122,810 | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 20,000 | 542,810 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்டகாலக் கடன் | | 60,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 28,000 | |
| செலுத்த வேண்டிய வட்டி **(W-4)** | 5,400 | |
| அட்டுறு செலவினங்கள் (1,000 + 600) | 1,600 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி **(W-6)** | 8,000 | 43,000 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **645,810** |

**(08 புள்ளிகள்)**

**(c)** **Metro Wheels PLC**

**உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று**

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** *(ரூ.'000)*

| | **குறிப்பிடு மூலதனம்** | **கைக்கொள் இலாபம்** | **மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 2024 ஏப்ரல் 01 இல் மீதி | 400,000 | 18,000 | - | 418,000 |
| ஆண்டிற்கான இலாபம் | - | 124,810 | - | 124,810 |
| பங்கிலாபக் கொடுப்பனவு | - | (20,000) | - | (20,000) |
| மீள்மதிப்பீட்டு நயம் | - | - | 20,000 | 20,000 |
| **2025 மார்ச் 31 இல் மீதி** | **400,000** | **122,810** | **20,000** | **542,810** |

**(03 புள்ளிகள்)**

**(d)** **Metro Wheels PLC**

**PPE இன் மாற்றங்களைக் காட்டும் கூற்று**

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** *(ரூ.'000)*

| | காணி | கட்டடம் | இயந்திரம் | மோட்டார் வாகனம் | உபகரணம் | CWP | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2024 ஏப்ரல் 01 இல் கிரயம் | 120,000 | 60,000 | 65,000 | 15,000 | 7,000 | 85,000 | 352,000 |
| சேர்ப்பனவுகள் | - | - | - | - | - | - | - |
| மீள்மதிப்பீட்டு நயம் | 20,000 | - | - | - | - | - | 20,000 |
| வட்டிக் கிரய மூலதனவாக்கம் **(W-4)** | - | - | - | - | - | 5,400 | 5,400 |
| அகற்றல்கள் | - | - | - | (8,000) | - | - | (8,000) |
| சேத இழப்பு **(W-7)** | - | - | (2,500) | - | - | - | (2,500) |
| **2025 மார்ச் 31 இல் மீதி** | **140,000** | **60,000** | **62,500** | **7,000** | **7,000** | **90,400** | **366,900** |
| **தேய்மானம் :** | | | | | | | |
| 2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் | - | 18,000 | 21,000 | 4,000 | 600 | - | 43,600 |
| ஆண்டிற்கான தேய்மானம் | - | 1,200 | 6,500 | (3,750) | 1,400 | - | 12,850 |
| அகற்றல்கள் | - | - | - | (5,500) | - | - | (5,500) |
| **2025 மார்ச் 31 இல் திரண்ட தேய்மானம்** | **-** | **19,200** | **27,500** | **2,250** | **2,000** | **-** | **50,950** |
| **2025 மார்ச் 31 இல் நிகர கொண்டுசெல்லல் தொகை** | **140,000** | **40,800** | **35,000** | **4,750** | **5,000** | **90,400** | **315,950** |

**(04 புள்ளிகள்)**

**செய்முறைகள்:**

**W-1 விற்பனைகள்**

| | |
|---|---|
| TB இன் படி விற்பனைகள் | 940,000 |
| வழு – PPE விற்பனையை பதிவு செய்தல் | (6,500) |
| | **933,500** |

**W-2 வாகன விற்பனை நயக் கணக்கு**

| | |
|---|---|
| பெற்ற காசு | 6,500 |
| முன்கொணரற் பெறுமதி | (2,500) |
| (கிரயம் 8,000 – திரண்ட தேய்மானம் 5,500) | |
| **Gain** | **4,000** |

**W-3 தேய்மானக் கணக்கு**

| | |
|---|---|
| கட்டடம் (180,000 – 120,000) / 50 | 1,200 |
| இயந்திரம் (65,000 / 10) | 6,500 |
| உபகரணம் (7,000 / 5) | 1,400 |
| மோட்டார் வாகனம் (15,000 / 4) | 3,750 |
| | **12,850** |

**W-4 வட்டி மூலதனவாக்கக் கணக்கு**

மூலதனமாக்கப்பட வேண்டியய வட்டி

= 60,000 x 12% x 9/12 = **<u>5,400</u>**

**W-5**

| | ஏனைய வருமானம் | நிருவாகச் செலவினங்கள் | விநியோகச் செலவினங்கள் | ஏனைய செலவினங்கள் |
|---|---|---|---|---|
| **TB இன் படி** | 4,000 | 75,000 | 40,000 | 9,000 |
| அறவிட முடியாக் கடன் மீட்பு | 1,800 | - | - | - |
| ஏற்பாடு மீதான அறவிட முடியாக் கடன் **(W-9)** | 12,660 | - | - | - |
| தேய்மானம் **(W-3)** | - | 9,100 | 3,750 | - |
| மோட்டார் வாகன விற்பனை மீதான நயம் **(W-2)** | 4,000 | - | - | - |
| கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனை | - | 1,600 | - | - |
| வாடகை (4,800 x 3/12) | - | 1,200 | - | - |
| சேத இழப்பு **(W-7)** | - | - | - | 2,500 |
| | **22,460** | **86,900** | **43,750** | **11,500** |

**W-6 செலுத்த வேண்டிய வருமான வரி**

| | | | |
|---|---|---|---|
| காசு | 11,000 | B/B/F | 10,000 |
| B/C/D | 8,000 | P/L | **8,000** |
| | | P/L குறைவான ஏற்பாடு | **1,000** |
| | **19,000** | | **19,000** |

**W-7**

| | |
|---|---|
| கிரயம் | 65,000 |
| திரண்ட தேய்மானம் | (27,500) |
| முன்கொணரற் பெறுமதி | 37,500 |
| மீட்கத்தக்க பெறுமதி | 35,000 |
| **சேத இழப்பு** | **2,500** |

**முற்கொடுப்பனவு வாடகை :**

4,800 x 3/12 = 1,200 – வாடகை P/L

4,800 x 9/12 = 3,600 – முன்செலுத்திய வாடகை

**W-8 வியாபார வருமதிகள் கணக்கு**

| | |
|---|---|
| TB இன்படி மீதி | 105,000 |
| வழு: அறவிட முடியாக் கடன் மீட்பு | 1,800 |
| | 106,800 |
| அறவிட முடியாக் கடன் ஏற்பாடு (ரூ.106,800/- இல் 5%) | (5,340) |
| | **101,460** |

**W-9 வியாபார வருமதிகளுக்கான விடுதொகை**

| | |
|---|---|
| TB இன்படி மீதி | 18,000 |
| தேவையான ஏற்பாடு | (5,340) |
| **எமது ஏற்பாடு** | **12,660** |

**(Total 25 புள்ளிகள்)**

**வினா 09 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :**

**Unit 04 – நிதி மற்றும் நிதிசாரா தரவுகள் மற்றும் தகவல்களின் விளக்கம்**

கற்றற் பேறுகள் – நிதி விகிதங்களைப் (இலாபத்தன்மை விகிதங்கள், முதலீட்டு விகிதங்கள், திரவத்தன்மை விகிதங்கள், வினைத்திறன் விகிதங்கள் மற்றும் நெம்பு விகிதங்கள்) பயன்படுத்தி, நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்து, விளக்குதல்

**(a)**

| | | | 2024/25 |
|---|---|---|---|
| **(i)** | **மொத்த இலாப விகிதம் =** | $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$ = | $\frac{430,000}{1,850,000} \times 100$ |
| | | = | **<u>23.24%</u>** |
| **(ii)** | **நிகர இலாப விகிதம் =** | $\frac{\text{PAT}}{\text{விற்பனை}} \times 100$ = | $\frac{150,000}{1,850,000} \times 100$ |
| | | = | **<u>8.11%</u>** |
| **(iv)** | **கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்** | = | $\frac{520,000}{1,295,000} \times 365$ |
| | $\frac{\text{சராசரிக் கடன்பட்டோர்}}{\text{கடன் விற்பனை}} \times 365$ | = | **<u>147 நாட்கள்</u>** |
| **(iv)** | **கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம்** | = | $\frac{125,000}{1,211,250} \times 365$ |
| | $\frac{\text{சராசரி கடன் கொடுத்தோர்}}{\text{கடன் கொள்வனவுகள் (W-1)}} \times 365$ | = | **<u>38 நாட்கள்</u>** |
| **(v)** | **பங்கொன்றின் வருவாய்** | $\frac{\text{வரிக்குப் பின்னரான நிகர இலாபம்}}{\text{சாதாரண பங்குகளின் எண்ணிக்கை}}$ | $\frac{150,000}{20,000}$ |
| | | | **<u>ரூ.7.50</u>** |

**W-1 கொள்வனவுகள்**

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 115 |
| கொள்வனவுகள் | **1,425** |
| இறுதி இருப்பு | (120) |
| விற்பனைக் கிரயம் | **1,420** |

கடன் கொள்வனவுகள் = 1,425 x 85% = **<u>1,211,250</u>** **(05 புள்ளிகள்)**

**(b)** **Vega PLC** இன் இலாபத்தன்மை விகிதங்கள் தொழிற்றுறைச் சராசரி விகிதங்களுடன் ஒப்பிடுகையில் சற்றுக் குறைவாக உள்ளன. 25% என்ற தொழிற்றுறைச் சராசரியுடன் ஒப்பிடும்போது **Vega PLC** ஆனது மொத்த இலாப விகிதம் 23.24% இனை மாத்திரமே பதிவு செய்துள்ளது. இது குறைவான விலை விதிக்கப்பட்டமை மற்றும் உயர்ந்த விற்பனைக் கிரயங்கள் காரணமாகவோ, குறைவான விற்பனைகள், வழங்கல் சங்கிலியின் வினைத்திறனின்மை போன்றவற்றாலோ ஏற்பட்டிருக்கலாம். அது நிகர இலாபத்திற்கு வரும்போது, **Vega PLC** இன் நிகர இலாப விகிதம் 8.11% ஆக இருப்பதுடன் இது 10% என்ற தொழிற்றுறைச் சராசரியை விடக் குறைவாக உள்ளது. இது உயர்வான செயற்பாட்டு அல்லது நிதிச் செலவினங்கள் காரணமாகவோ, உள்ளக நிருவாகத்தின் வினைத்திறனின்மை காரணமாகவோ அல்லது விநியோக வழிமுறைகளைக் கையாள்வதிலுள்ள வினைத்திறனின்மை காரணமாகவோ ஏற்பட்டிருக்கலாம்.

90 நாட்கள் என்ற தொழிற்றுறைச் சராசரியுடன் ஒப்பிடுகையில் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் 147 நாட்களாக இருக்கிறது. இது கம்பனியின் பலவீனமான கடன்பட்டோர் சேகரிப்பு நடைமுறை காரணமக இருக்கலாம். எனவே வசூலிப்பை மேம்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் அல்லது கடன்பட்டோர் முன்னதாகவே தீர்ப்பனவு செய்வதை ஊக்கப்படுத்த தள்ளுபடிகளை வழங்குதல் வேண்டும்.

**Vega PLC** இன் கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலமானது தொழிற்றுறைச் சராசரியுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறுகியது. இது விரைவான கடன் கொடுப்பனவுகள் அல்லது குறைந்த சாதகமான கடன் நிபந்தனைகள் காரணமாக இருக்கலாம். திரவத்தன்மையை முகாமை செய்வதற்கு வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதன் மூலம் இது மேம்படுத்தப்பட வேண்டும்.

பங்கொன்றின் வருவாய் ரூ. 7.50 என்பதுடன் தொழிற்றுறைச் சராசரியை விட சற்றுக் குறைந்தது. குறைவான இலாபத்தன்மை என்பது பிரதான விடயமாகும். ஏனெனில் EPS ஐ நேரடியாகப் பாதிக்கிறது.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 10 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அலகு 05 – ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள்**

கற்றற் பேறுகள் – இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, கம்பனிகள் குழுமம் ஒன்றிற்கான ஒருங்கிணைந்த இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பர்.

**(a)**

| | |
|---|---:|
| கொள்வனவு மறுபயன் (Purchase Consideration) (75%) | 90,000 |
| NCI இன் சீர் மதிப்பு | 25,000 |
| **மொத்த மறுபயன்** | **115,000** |
| கழி: கையகப்படுத்தலில் நிகரச் சொத்துக்கள் (60,000 + 4,000) | (64,000) |
| கையகப்படுத்தல் மீதான நன்மதிப்பு | 51,000 |

**(04 புள்ளிகள்)**

**(b)**

**Orion PLC குழுமம்**
**ஒருங்கிணைந்த நிதி நிலைக் கூற்று**
**2025 மார்ச் 31 இல்**

| **சொத்துக்கள்** | | **ரூ.'000** | |
|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 120,000 + 80,000 | 200,000 | |
| நன்மதிப்பு (நிகர சேதஇழப்பு) | 51,000 - 4,000 | 47,000 | ரூ.4,000 என்பது சேத இழப்பு |
| இருப்புகள் **(W-1)** | 18,000 + 22,000 – 200 | 39,800 | |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 20,000 + 14,000 | 34,000 | |
| காசு மற்றும் வங்கி | 5,000 + 2,500 | 7,500 | |
| **மொத்த இலாபம்** | | **328,300** | |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | | |
| குறிப்பிடு மூலதனம் | 150,000 | 150,000 | |
| குழும கைக்கொள் இலாபம் **(W-2)** | | 31,350 | |
| கட்டுப்பாடற்றோர் நாட்டம் **(W-3)** | | 25,450 | |
| நீண்ட காலக் கடன்கள் | 40,000 + 30,000 | 70,000 | |
| ஊழியர் நன்மைகள் | 6,000 + 3,500 | 9,500 | |
| வியாபார சென்மதிகள் | 27,000 + 12,000 | 39,000 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 3,000 | 3,000 | |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **328,300** | |

**செய்முறை :**

**(W-1)** தேறாத இலாபங்கள் = 1,000/125 x 25 = 200

**(W-2) ஒன்றித்த கைக்கொள் இலாபம்**

| | | | |
|---|---|---|---|
| URP | 150 | B/B/F | 30,000 |
| நன்மதிப்பு சேத இழப்பு | 3,000 | **NP** இலாபம் | 4,500 |
| B/C/D | 31,350 | | |
| | **34,500** | | **34,500** |

**(W-2) NCI**

| | | | |
|---|---|---|---|
| URP | 50 | சீர் மதிப்பு | 25,000 |
| நன்மதிப்பு | 1,000 | இலாபம் | 1,500 |
| B/C/D | 25,450 | | |
| | **26,500** | | **26,500** |

**(11 புள்ளிகள்)**

**(Total 15 புள்ளிகள்)**

***பகுதி C முடிவு***